# செங்கல்பட்டு நகராட்சி

## சிறப்பு கூட்டம்

**2021ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 31–ம் தேதி முற்பகல் 4.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம், நகர வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 24.08.2021 அன்று செங்கல்பட்டு நகராட்சி அதனை சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள ஊராட்சிகளை ஒன்றினணத்து எல்லை விரிவாக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து 26.08.2021 அன்று அரசு கூடுதல் தலைமை செயலர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் செங்கல்பட்டு நகராட்சி எல்லையினை விரிவாக்கம் செய்வதற்கான முன்மொழிவினை அரசின் ஒப்புதலுக்கு தயார் செய்து அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிய மாவட்டமாக செங்கல்பட்டு நகரினை மாவட்டத்தின் தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. செங்கல்பட்டு நகராட்சி தற்போது 6.09 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு அமைந்துள்ளதால் மாவட்ட தலைநகருக்குரிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய நிதி மற்றும் இடவசதி இல்லாததால் செங்கல்பட்டு நகராட்சி மற்றும் அதனை சுற்றி அமைந்துள்ள நகரமயமாக வளர்ச்சி அடைந்துள்ள ஊராட்சிகளை இணைத்து ஒருங்கிணைந்த வளர்ச்சியை மேற்கொள்ள கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை செங்கல்பட்டு நகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**I. காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஊராட்சிகள் :-**

1. சிங்கப்பெருமாள் கோயில் ஊராட்சி
2. அஞ்சூர் ஊராட்சி
3. குன்னவாக்கம் ஊராட்சி
4. வீராபுரம் ஊராட்சி
5. தென்மேல்பாக்கம் ஊராட்சி
6. புலிப்பாக்கம் ஊராட்சி
7. திம்மாவரம் ஊராட்சி
8. பழவேலி ஊராட்சி
9. ஆலப்பாக்கம் ஊராட்சி
10. மேலமையூர் ஊராட்சி
11. வல்லம் ஊராட்சி

12. ஒழலூர் ஊராட்சி
13. பட்ரவாக்கம்
14. செட்டிபுண்ணியம் ஊராட்சி

**II. திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய ஊராட்சி :-**

1. திருமணி ஊராட்சி

மேற்படி 15 ஊராட்சிகளையும் செங்கல்பட்டு நகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டால் செங்கல்பட்டு நகராட்சியின் பரப்பளவு 6.09 ச.கி. மீட்டரிலிருந்து 75.41 சதுர கி.மீட்டர் பரப்பளவிலும், ஆண்டு வருவாய் 13.05 கோடியிலிருந்து 32.66 கோடியாகவும் உயரும். இதனால் செங்கல்பட்டு நகராட்சிக்குரிய அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் முழுமையாக செயல்படுத்த ஏதுவாக இருக்கும். இதனால், பிற்காலத்தில் செங்கல்பட்டு நகராட்சியினை நிலை-I லிருந்து மேலும் தரம் உயர்த்தவும் வாய்ப்பாக அமையும். எனவே, மேற்குறிப்பிட்ட 15 கிராம ஊராட்சிகளை செங்கல்பட்டு நகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்வதற்கான முன்மொழிவினை தயார் செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ/கு :-

செங்கல்பட்டு நகராட்சியுடன் மேற்குறிப்பிட்ட 15 கிராம ஊராட்சிகளையும் இணைத்து எல்லைவிரிவாக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 8717/2007/எப் 1 )

தனி அலுவலர் /ஆணையர்
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## <u>சாதாரணக் கூட்டம்</u>

## 2021ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 31—ம் தேதி முற்பகல் 11.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.

---

பொருள்—1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்மா மினி கிளினிக் ஏற்படுத்தப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததன் பேரில் வார்டு எண்.10—ல் வடமலை பள்ளி அருகில் உள்ள கட்டிடத்தை புதுப்பித்து அம்மா கிளினிக்காக மாற்ற தயாரிக்கப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ.146509/— மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15—ல் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

அ.கு—

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1287, நாள்31.08.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்—2

செங்கல்பட்டு நகராட்சியில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 10.08.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி ITI வளாகத்தில் சுதந்திர தினவிழா பண்டிகைக்காக பொதுமக்கள் பயன்பாட்டிற்க்காக தற்காலிக கழிவறை அமைக்கும் பணி | 0.87 | SK Sanitaz | மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | | Leo Polymer Enterprises | 0.24/— அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1288, நாள்31.08.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட IUDM 2018–19 திட்டத்தில் தட்டான் மலை பகுதியில் புதியதாக 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேற்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தடை மட்ட தொட்டி அமைக்கும் பணிக்கு M/S KLK கன்சக்ஷன் என்பவர் 05.07.2019 நாளிட்ட ஒப்பந்தபுள்ளியில் கலந்துக் கொண்டு பணி செய்ய ஒப்பந்தம் எடுத்துள்ளார். மேற்கண்ட பணிக்கு 22.08.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி பணியினை முடித்து தர பலமுறை அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது எவ்வித நடவடிக்கையும் எடுக்காததினால் தங்களது ஒப்பந்தத்தை ரத்து செய்து ஒப்பந்தபட்டியல் இருந்து நீக்கம் செய்து கருப்பு பட்டியலில் சேர்க்கக்கூடாது என காரணம் கேட்டு அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் பணியில் எவ்வித முன்னேற்ற நடவடிக்கையும் இல்லாத காரணத்தால் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2851/2018/இ1, நாள்.06.07.2021–ன் படி M/S KLK கன்சக்ஷன் நிறுவனத்தின் பணி உத்தரவு ரத்து செய்யப்படுவதுடன் ஒப்பந்தமும் ரத்து செய்யப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட திட்ட பணி முடிக்காததினால் பல அறிவிப்புகள் ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்டும் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும், ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்யும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1289, நாள்31.08.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–4

செங்கல்பட்டு நகராட்சி அரசு பொது மருத்துவமனை வலாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் இரண்டு மாதத்திற்க்கு ஒருமுறை செங்கல்பட்டு திம்மாவரம் பகுதியில் அமைந்துள்ள Tamilnadu Civil Supply Corporation–ணில் இருந்து அம்மா உணவகத்திற்க்கு தேவையான அரிசி மூட்டைகள் லாரி மூலமாக வரவைக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது 2021–22 ஆண்டுக்கு லாரி வாடகை ஏற்றுக் கூலி, இறக்கு கூலி இரண்டு மாதத்திற்கு ரூ.8000/–ம் வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1290, நாள்31.08.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

திரு.வெங்கடராமன் என்பவர் அவர்தம் கட்டிடம் இடிப்பு (ராதாமகால்) சம்பந்தமாக. இந்நகராட்சியினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.9478/2020–ல் வழக்கு

தொடர்ந்துள்ளார். தற்போது இவ்வழக்கினை திரு.மௌரியா கூடுதல் அரசு வழக்கறிஞர் நடத்தி வரும் நிலையில் இவ்வழக்கினை நிர்வாக நலன் கருதி திரு.P.சீனிவாஸ் என்பவரிடம் ஒப்படைக்கவும் இவ்வழக்கிறிகான கட்டணம் ரூ.15000/– த்தினை அன்னாருக்கு வழக்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.

2. அவசர அவசியத்தினிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதிப் பெற்று நடடிவக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1291, நாள்31.08.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–6**

திருமதி.பிரேமா என்பவர், இந்நகராட்சியினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் (வழக்கு எண் Cont P.No.1327 of 2014) இவ்வழக்கினை எதிர்த்து இந்நகராட்சியின் சார்பின் வாதிட திரு.P.சீனிவாஸ் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞரிடம் அதற்கான ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கிற்கான கட்டணம் ரூ.15000/– த்தினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர்களின் முன் அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1292, நாள்31.08.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**செங்கல்பட்டு நகராட்சி**